[2012 ஏப்ரல் 17

3. தே.மு.தி.க. சட்டமன்றக் கட்சிக்கு ஒதுக்கப்பட்ட அறையில் மாற்றம்—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு.ப. கிருஷ்ணன், என்ன பாயின்ட் ஆப் ஆர்டர்?*

திரு. கு.ப. கிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அதிகார வரம்பிற்குட்பட்டு முதன்மை எதிர்க்கட்சிக்கு அறை ஒதுக்கீடு செய்திருக்கிறீர்கள். அந்த அறை தங்களுக்கு வசதியாக இல்லை என்று கூறி எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்கள் வெளிநடப்புச் செய்ததாக ஒரு செய்தியைப் பார்க்கிறேன், நிகழ்வைப் பார்க்கிறேன். எனக்கு ஒரு விளக்கம் தாங்கள் அளிக்க வேண்டும். தேசிய முற்போக்கு திராவிட கழகம் வெளிநடப்புச் செய்ததா அல்லது அக்கட்சியிலே இருந்த ஒரு சிலர் வெளிநடப்புச் செய்திருக்கிறார்களா என்பதைத் தாங்கள் விளக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன்.*

***திரு. க. பாண்டியராஜன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய முற்போக்கு திராவிட கழகம்தான் வெளிநடப்புச் செய்திருக்கிறது. ஆனால் எங்களுக்கு இருக்கிற உரிமையாக இந்த மானியக் கோரிக்கையில் பேசுவதற்காக இரண்டு பேருக்கு வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. அதனால், அந்த வாய்ப்பைப் பயன்படுத்திப் பேச விரும்புகிறோம். ஆனால், எங்களுடைய குறை அப்படியேதான் இருக்கிறது. அதற்கு ஒரு அடையாளமாக நாங்கள் வெளிநடப்புச் செய்திருக்கிறோம். ஆனால், இந்தப் பேச்சில் கலந்துகொள்ள வேண்டும் என்று எங்கள் தலைவர் உத்தரவு போட்டிருக்கிறார். அதனால் வந்திருக்கிறோம். கருத்துகளைக் கேட்டீர்கள் என்றால் சந்தோஷப்படுவோம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கொறடா உத்தரவை நீங்கள் மதிக்கவில்லையா?*